உ

கடவுள் துணை.

செல்வப்பிள்ளை அகடவிகட

கலியாணச் சிந்து.



இவை-சிறுமணவூர்,
முனிசாமி முதலியாரவர்களால்
இயற்றப்பட்டு,

ஆதிபுரி
இரத்தினவேலு முதலியாரது
வாணீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1911.

சென்னை நாராணமுதலி வீதி
52-வது நெ. வீடு.

உ

கடவுள் துணை.

வந்தாவா போநாபோ
லோபிச்சிந்து என்னும்
இயற்பெயருடைய
செல்வப்பிள்ளை அகடவிகட

கலியாணச்சிந்து.

தொப்பைவணக்கம் நேரிசைவெண்பா.

கைகாலுந்தொந்தியெலாங் காண்பயமாய்வீங்கி
மெய்தூக்கமாட்டாத மேதகனே—பொய்யேன்காண்
செல்வமகனார்க்கு செய்யும்விவாகத்திலுனை
சொல்லாதிருப்பேன் துணை.

குரவன் துதி புராண விருத்தம்.

மலைசெறிந்தவனைக்காய்ந்த மடையனார்மகனேநல்ல
குலமதைகண்டிற்கொள்ளாக் குருடனேகூறக்கேளாய்
தலமதில்விகடஞானத் தலையனார்மனதின்போது
சிலைசுமக்குரவாவுந்தன் சேவடியெனகுப்போற்றி.

தகப்பனாராகிய லோபிசொல் தெம்மாங்கு.

என்மகனே கண்மணியே கொஞ்சம் ஈஸ்பீஸ்கற்றவனே
கலியாணமென்றுசொல்லும் ஒருகடனிருக்குதெங்களுக்கு.

சிந்து.

பெண்ணும்படிந்தாச்சு பணமுந்துலையாச்சு
இடமுமகுதுந்தாச்சு எல்லாம்படிந்தாச்சு
முன்னேபெரியவர்கள் முழுதும்பிழைத்திருந்த
நாட்டுப்புறம்போய்வருவோம் நடடாமகனேயப்பா நா

இதுவும் லோபிசொல் தெம்மாங்கு.

பட்டணத்தில்செய்யவென்றாலப்பா பகல்வேஷம்போடவேணும்
தட்டுமுட்டுஆட்டமொடுகொஞ்சம் தலையொரடிநிற்கவேணும

சிந்து.

பத்தில்விழுந்தொரு பாம்புமடியாதென்று
மெத்தப்பெரியவர்கள் இட்டப்பழமொழிபோல்

ஆயிரங்காலப்பயிர் ஆனையினாலேமகனே
உரவில்கலந்துகொண்டால் ஒருபோதுங்குற்றமில்லை

செல்லப்பிள்ளைசொல் தெம்மாங்கு.

உரவும்வரகாச்சி அந்தவூர்முஞ்சுங்காஞ்சிப்போச்சி
ஐயோவெனக்குஅந்த ஆதரவுந்தேவையில்லை

சிந்து

டோண்டுகோபாதர் அந்த தொல்லையெனக்குவேண்டாம்
நாட்டுப்புரங்களெல்லாம் நான்ஸென்ஸ்உதவாது
பைகாட்டுபிரதர்களோடு பட்டணந்தன்னிலே
பக்குவமாய்செய்யவெகு மிக்கவுரவிருக்குது ௩ா

லோபிசொல் தெம்மாங்கு.

அடவுன்படிப்பில்பிடிபிடிக்க அந்தபாஷையொன்றுந்தெரியலியே
நம்மகுடிவழக்கில்லாத கோணலெல்லாங்காட்டுகிறாய்

சிந்து.

ஏறியேமோக்ஷலோகம் ஏத்தமேகைலாசம்
கழனியேபஞ்சாங்கம் கலப்பையேவேதாந்தம்
மண்ணேபிரதானம் மண்வெட்டேசாஸ்திரம
இப்படியிழைத்துவிட்டோம் உன்னிழவுக்கென்னசெய்வோம்

செல்வப்பிள்ளைசொல் தெம்மாங்கு.

மாட்டைகுத்திமண்கிளரி இந்தமானமதைப்பார்த்தழுதும்
டேபிளிகட்ன்றிபூல்நீ தொணதொணென்றுபேசாதே

சிந்து.

ஸ்டீர்ட்முழுதும்பந்தல்வேணும் சிங்காரக்கொட்டாய்வேணும்
வாலசேட்குளோப்புல்ஸ்தர் வரிசையாய்மாட்டவேணும்
பிரண்டுகள்ஷேக்கென்கொடுத்து பலமாயுலாத்தவேணும்
ஷட்வுட்பீமில்ஸ்லேடிகளால் சதுர்கள்நடந்தவேணும்
கச்சேரிகாலட்சேபம் காலைமாலைவாடவேணும்
பிரிஞ்சிபுலாகிச்சடிகள் பிச்சைக்கொடுக்கவேணும்
அதிற்மேளவகை அண்டங்கிழியவேணும்
இப்படிநடத்திடாமல் தப்புந்தாறும்பிணத்துகிறாய்

லோபிசொல் தெம்மாங்கு.

பட்டணத்தில் மூட்டைவைத்து அப்பா
உன்னை படிபடியாய் நான்வளர்த்தேன்
தண்டுக்கிடம் விட்டதுபோல் என்
பணத்தை நாலுவழி யாக்கவந்தாய்

செல்வப்பிள்ளைசொல் சிந்து.

நாலுவழிமூணுவழி நாலுமூணுமேழுவழி
எந்தவழிபோனாலென்ன வந்தவழிநீபோரு
காடழைக்குதிங்கே வீடுந்தூரத்தங்கே
போடாயுபிளட்டிசுவர் பணம்போனால்மயிர்போச்சி

செல்வப்பிள்ளைசொல் விருத்தம்.

அல்லோலென்பிராணரான பிரதர்களேதோழமாரே
பொல்லாதகிழவன்பேரை பிடிவாதமியற்றுகின்றான்
நல்லநாள்பார்க்கேன்சற்று நமக்குநீருதவிசெய்தால்
எல்லாருஞ்சேர்ந்துயின்றே எமபுரங்காட்டலாமே.

தரு.

எட்டியுதையுமெந்தன் மிஸ்டரே-ஓரே
தட்டாய்த்தட்டிப்போடும் இஷ்டரே

மட்டிக்கிழவன்சும்மா மனமும்பொருக்கமாட்டான்
மயிலைப்போன்றவேசி யார்க்குங்கொடுக்கமாட்டான் எ

பரத்தையர்சுகமிந்தப் பாவியறியமாட்டான்
பணத்தைப்புதைத்துப் பூதம்போல்கார்க்கிறான் எ

அறுமைலேடிகள்சுகம் அணுவுமறியமாட்டான்
சிறுபாணவூர்தமிழ் சொல்லுங்கேழ்க்கமாட்டான் எ

வ-ம். இவ்விதமாக பிரண்ட்ஸ்களோடு கூடிக்கொண்டு ஆகஸ்மாத்தாக அடல்சடல் வேடிக்கையுண்டுபண்ணி கிழவனுக்கு ஆனமட்டும் சரிப்படுத்தி மூலையில் தள்ளிவிட்டு சிநேகிதர்களுக்கு உஷார்படுத்துகிற விதங்காண்க.

செல்வப்பிள்ளைசொல் ஆனந்தக்களிப்பு.

பைகாட்சிநேகரோவாரும் எந்தன்
பணம்போனால்போகட்டும் வேடிக்கைபாரும் பை

பெற்றோர் மனம்நொந்து வேகட்டும்-நம்ம
பேர்மாத்திரங்கோட்டை கொடிபோல்பறக்கட்டும்
உற்றார்ரெல்லாம் சாகட்டும்-சரியாய்
ஒவ்வொரு ஆயிரம தூசிபோல்பறக்கட்டும் பை

வேசியெல்லாம்நம்மை நினைக்கட்டும்-தினம்
வீண் தர்மம்செய்வோர்கள் ஆந்தைப்போல்முழிக்கட்டும்
ராஜனென்றேநம்மை மதிக்கட்டும்
ரயிட்டானடப்ளாச்சு பூட்டின்கள்பறக்கட்டும் பை

சென்னையிலேபுகழ் விளங்கட்டும்-சிறு
மணவூர்முனிசாமி தமிழ்கவிசொல்லட்டும்
பன்னியுலகெங்கும் படிக்கட்டும்-இதை
பாடிவிற்போர்களும் சிலநாள்பிழைக்கட்டும் பை

செல்வப்பிள்ளை சிநேகருக்குச்சொல் விருத்தம்.

திக்கெங்கும்புகழ்படைத்தோ னெனக்கிசைந்த
செல்வர்களேசிங்காரத் தோழமாரே
மற்கட்டுந்தீரர்களே பணங்கரைக்க
மந்திரிபோல்தந்திரங்கள் செய்யும்பேரே
டிக்கட்டும்போட்டெந்தன் கலியாணத்தை
திரைகடல்சேருலகமெல்லாந் தெரியவிக்க
சொற்கட்டும்வந்தனங்கள் முகூர்த்தகாலம்
சுருக்காகயெழுதி நிறைவேற்றுவீரே.

ஆ ஆ எனது அரிய விரிய பெரிய பிரியமுள்ள செலவப்பிள்ளையேகேளும் நம்ம டிக்கட்டைப் பார்த்தாலோ இந்திரன் அனுப்பியதிருமுகம்போலிருக்கவேணும் அதிலுள்ளசங்கதிகளே திரிமூர்த்திகளும் அறியக்கூடாது ஏனென்றால் தாய்வுரவென்றும் தாதையுரவென்றும் மங்கைமநதையாக வந்து சோத்தைவலித்து பதுங்குவார்கள் ஆகையால் அந்த பணத்தையெல்லாம் சங்கீதசாயித்திய பரத நாட்டிய சுகபோகத்திற் சிறந்த நமது அருமைக் கண்மணிகளாகிய லேடிகளுக்கு முத்தாரங்கள் தோடாக்கள் கண்டாமணிகள் நவலோகங்களால் அமைத்த சேலே முதலிய ஆடையாபரணங்களே பரிசுக் கொடுப்போமானால் நம்மபெயர் என்றைக்கும் அழியாதிருக்கும் ஆகையால் டிக்கட்டுமாத்திரம் இக்கட்டாகவே இருக்கவேணும் இஷ்டர்களே.

செல்வப்பிள்ளை கலியாண டிக்கட்டின் விபரம்.

நொண்டிச்சிந்து.

திகழ்மகிழ்புகழ்படைத்த சென்னைவளர்
செல்வர்களேவிபரம் சொல்லுவேன்கேள்

நீங்களுமிங்கிலீஷ் வருஷம் ஆயிரத்தி
எண்ணூற்றித்தொண்ணூற்றி எண்ணில்புகுந்து
நழுவியதமிழிரண்டு மகாஜிந்து
விருஷங்கூத்தாடிமாதம் நாற்பதாந்தேதி
உக்கிரவாரம்சிங்கமுகத்தில் இருவருக்கும்
ஒருமித்தசுபதினம் மரணயோகத்தில்
காலையில்ஒருமணிக்கி வாய்திறந்து
கண்டமீனை தூண்டுபூனை லக்கினத்தில்
என்னிடதெஸ்ட்டைபுத்திரன் சிரஞ்சீவி
யேணிபர்லேபல்கீண்ட ஆசாமிக்கும்
தானறிபாதவூர்க்கு மணியம்
தாசில்முனிஷீப்பு மகள் யேகபுத்திரி
பஜாரிவெங்கையம்மாள் இருவருக்கும்
பத்திரிகைசொன்னபடி சுபதினத்தில்
வெள்ளைப்பட்டணம் நடுவில்ஐயா
கொள்ளையடித்தான்மூலை பள்ளத்தெருவில்
அப்படிஇப்படியுந்தள்ளி டோர்கெம்பர்
ஆனமட்டும்நான்வீடு செங்கல்கிரகத்தில்
நடக்குமமுகூர்த்தத்திற்கும் மறுநாள்
நாலுபேற்குமுன்கொளுத்தும் அக்கினிபேட்டிக்கும்
இடையுபவாயத்திற்கும் தங்கள்
இஷ்டருக்குஇஷ்டரொடு கஷ்டமாகவந்து
மேற்படிசுபகிரிகை அர்த்தத்தை
மெள்ளமெள்ளகெட்டியே நடத்துவீரென்று
மண்டிபோட்டு விண்ணப்பஞ்செய்து தங்கள்
ஏழைகளத்தைகொஞ்சம் கொர்த்திக்கிறேன் தந்தின

செல்வப்பிள்ளைசொல் லாவணி.

வல்லமைமிகுந்த செல்வரேயுமது
கல்விகள்சேர ஐயா
வளமாய்கோடிசு பலமாயெழுதினீர்
வருவார் வெகுபேரே
வாரமும்லோகமும் இப்படியமைந்திட
வருந்தீர்பஞ்சாங்கம் ஐயா
வையகத்திலுமக்குநான் கைம்மாறுசெய்திட
வழியேன் மெஞ்ஞானம்

செல்வத்தில்மிருந்த சீமானென்றெனக்கு
செய்தீர் வுபகாரம்
சிறுமணவூர்முனிசாமிசொல் தமிழுக்கு
செய்வேனே நமஸ்காரம்.

சிநேகிதர்சொல் தெம்மாங்கு.

டிக்கட்டுமாத்திரமே தீர்ந்ததென்று எங்கள்பேரில்
மிக்கட்டுகினைக்கவேண்டாம் எல்லாவேலையுந்தீர்ந்துதையா

ஐயா-பந்தல்முழுதும் தீர்ந்துபோச்சு
பாவைநடனம் கொட்டாயாச்சு
அந்தமான லயிட்டிறுசு
ஆயிரம்வரிசை மாட்டியாச்சு

ஐயா-வாழைகமுகு தேங்குமலைகள்
வர்ணக்கூந்தல் மிச்சங்குலைகள்
தாழையருகு குருவேர்தவனம்
தனித்தனிரஞ்சிதம் மதனபாணம்

ஐயா-சகலவேலையும் முடிந்துபோச்சி
சரியாய்முகூர்த்தம் நெருங்கிச்போச்சி நன்

தெ. அமாவாசைராவுகாலம் ஆராயிர்க்குமரணயோகம்
வேளைதப்பிபோகுதங்கே வலித்துகழுத்தில்பிழுத்துகட்டுவீர்

ஐயா-பொழுதுவிடிந்தால் கூட்டஞ்சேரும்
பிண்டாசோதரக் கிழவுகொடுக்கும்
விடியயிரண்டு ஜாமமிருக்கும்
வேலையிப்பவே நடத்திப்போடும்

ஐயா-வந்தபேர்கள் வழியைப்பார்க்கட்டும்
வாத்தியக்காரர்கள் குந்தியழட்டும்
சார்ஜிகேட்டால் இழுத்துஉதைப்போம்
சப்மன்கொணர்ந்தால் கவிழ்ந்துபடுப்போம் நன்

தெ. பஞ்சாங்கந்தம்பாமல் பலஜெனமும்சேராமலே
அஞ்சாறுபேராய் அந்த ராத்திரியில்நடத்திபோட்டார் நன்

ஐயா-பொழுதுவிடிந்து பூனை தூங்குது
போனஜனங்கள் வழியைப்பார்க்குது
பொகவுசுகெட்டுநாம் ஓடிவந்ததில்
பொழைக்கும்பொழைப்பும் போச்சேயென்குது

ஐயா-ஜெனங்கள் இப்படிக் கலையும்போது
செல்வப்பிள்ளையும் முடிக்கியெழுந்து
பட்டமபலர் பார்ப்பான்காணம்
சனவர்பிச்சி யெவனுங்காணம்

ஐயா-போலீஸ்சார்ஜி பண்ணிப்போடுவேன்
பிடித்துஜெயிலுக் கனுப்பிவிடுவேன் நன்

தெ. காசில்லாகலியாணம கண்குளிரவேநடந்தி
யீசனருளால்வருஷம் பிரண்டிரண்டுபிள்ளைபெருவார் நன்

ஐயா-தவழும்பிள்ளைகள் காலையிழுக்க
தாண்டும்பிள்ளைகள் கையைபிடிக்க
உயர்ந்தபிள்ளைகள் வேட்டியிழுக்க
வீடுமுழுதும் இறைச்சலெடுக்க

ஐயா-வீடுநிறைந்த பிள்ளைகளாலே
வயருநிறைந்த குழந்தையோடு
கைகள்நிறைய செல்வரோடு
கடவுள்அருளால் ஆயிசோடு

ஐயா-செழித்துவாழ்ந்தார் சுகமாயிருந்தார்
பழுத்தகிழமாய் படுத்துமிருந்தார் நன்

தெ. புலவரடிமாவரப்பிள்ளை முனிசாமிதமிழ்
உலகரியஅச்சிலிட்ட உத்தமரைக்கேள்மனமே நன்

கடல்நிறைந்த வுலகுக்குள்ளே
கனையபுதுச்சேரி வளவுக்குள்ளே
ஊருக்கெல்லாம் அன்னையென்று
வுதைக்குஞ்சென்னை நகருக்குள்ளே

அடியே-ஆனைகெவுனி பாளயம்பெருகே
ஆதியப்பன் வீதிவந்தே
தேனார்மதுவுன் வீதிவந்தே
செழித்துவாழும் நல்லமனதே

அடியே-காந்தரிஷிபுன் கோத்திரமாம்
கண்ணேபெயரும் ஆறுமுகமாம் நன்

அகடவிகட கலியாணச்சிந்து
முற்றிற்று.